இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனைக்கு லேப்ராஸ்கோபி (LAPAROSCOPY) எனப்படும் வயிற்றுப் பகுதியினுள்ள பித்தப்பை அறுவை சிகிச்சை, குடலிறக்கம் சரிசெய்தல், பயாப்ஸி செய்தல் கருப்பை நீக்கம் ஆகிய மருத்துவ தேவையை பூர்த்தி செய்யும் இக்கருவியை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திகலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி முன்னிலையில் மருத்துவமனை நிர்வாகத்திடம் பணித்தார்கள். மேலும் சிகிச்சை பெற்று வரும் தாய்சேய் அனைவருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வில் இராயபுரம் கிழக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள், உடனிருந்தனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை

பொதுமக்கள் அதிகம் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்வீர்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 18-

சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், சுற்றுலா குறித்த மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று (17.07.2025) சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைப் பெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, பொறியாளர் பிரிவின் மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் மற்றும் பராமரிப்பு பணிகளான சிதம்பரம் (சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதி பணிகள்) கோயம்புத்தூர் (கூட்டரங்கு கட்டட பணிகள்) காஞ்சிபுரம் (ஓட்டல் பராமரிப்பு பணிகள்) இராணிப்போட்டை (கவேரி பாக்கம் ஏரி கட்டட பராமரிப்பு பணிகள்) தற்போதைய நிலை குறித்து கேட்டு அறிந்து பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று (17.07.2025) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், சுற்றுலா குறித்த மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறியாளர், மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தங்கும் விடுதி மற்றும் ஓட்டல் பிரிவில் மதுரை, திருச்சி, சென்னை, போன்ற மண்டல அலகுகளின் வரவு செலவு மற்றும் விருந்தினர்களிடம் விருந்தோம்பல் குறித்த தகவல்களை மண்டல மேலாளர் மற்றும் மேலாளர்களுடன் உரையாற்றி மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, விருந்தோம்பல் சேவையை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து சுற்றுலா தொகுப்பு செயல் திறன் பற்றியும் தீவுத்திடல் வரவு செலவு மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, முந்தைய ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மீதான நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மிகவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், படகு குழாம்கள் மூலமாக அதிக லாபம் ஈட்டும் வகையில், பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் மேலும், தங்கும் விடுதி அறைகளை சிறப்பான முறையில் பராமரித்தல், பொதுமக்களை ஈர்க்கும் வகையான உணவு வகைகளை தயாரித்து வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா அவர்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறி யாளர், மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இராயபுரம் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம்!

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 18-

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்புக்குரிய திட்டங்களில் ஒன்றான மக்களின் குறைகளை போக்க, அவர்களின் இல்லம் தேடி வரும் திராவிட மாடல் அரசின் முத்தான திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சிறப்பு முகாம் இராயபுரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட மண்டலம் 5, வட்டம் 49ல் உள்ள மைனா பார்ட்டி ஹாலில் நடைபெற்றது.

பொதுமக்கள் மிக ஆர்வமாக கலந்துகொண்டு கோரிக்கை மனுக்களை வழங்கினர் மகளிர் உரிமைத்தொகை வேண்டி விண்ணப்பங்களும் மற்றும் வருவாய்த்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் நலத்துறை, குடும்ப நலத்துறை, நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை என அனைத்து துறைகளிலும் பொது மக்கள் விண்ணப்பங்களை வழங்கினர்கள்.

பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் ளாக தீர்வு காண வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளரும் - துணை முதலமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு வலியுறுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா செந்தில்குமார், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டலம்-5 அலுவலர் சொக்கலிங்கம், அனைத்து துறை அதிகாரிகள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் பொது மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில், நேற்று (17.07.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் வார்டு மேம்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச். ஆர். கௌஷிக், மண்டல அலுவலர் (பொ) ஆர்.சரவணன், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், இளநிலை / உதவிப் பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மண்டலம் 5,9-ல் பராமரிப்புப் பணி!

கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்படாது!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை.ஜூலை.18-

மண்டலம் - 5 (இராயபுரம்) எழும்பூர், வேனல்ஸ் சாலையில் கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்டுள்ள கசிவை சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 18.07.2025 அன்று இரவு 10 மணி முதல் 19.07.2025 காலை 10.00 மணி வரை (12 மணி நேரம்) மண்டலம் - 5 மற்றும் மண்டலம் 9 - க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ்கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, இராயபுரம் மற்றும் தேனாம்பேட்டை மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் - பகுதிப் பொறியாளர் கைபேசி எண் - கழிவு நீர் உந்து நிலையங்கள் வருமாறு

1. மண்டலம் - 5 (இராயபுரம்) 8144930905

எல்.ஜி சாலை கழிவுநீர் உந்து நிலையம். லிங்க் சாலை கழிவுநீர் உந்து நிலையம். தெற்கு கூவம் சாலை கழிவுநீர் உந்து நிலையம். காந்தி இர்வின் சாலை கழிவுநீர் உந்து நிலையம்.

2. மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) 8144930909

கிரீம்ஸ் ரோடு கழிவுநீர் உந்து நிலையம். கிரியப்பா சாலை கழிவு நீர் உந்து நிலையம். ஜி.என் செட்டி ரோடு கழிவுநீர் உந்து நிலையம். குமரப்பா சாலை கழிவுநீர் உந்து நிலையம். சுதந்திர தீன பூங்கா கழிவுநீர் உந்து நிலையம். சாலை தீவு கழிவுநீர் உந்து நிலையம்.

இவ்வாறு குடிநீர் வாரியம் சார்பில் தெரிவித்துள்ளது.

எடப்பாடி போல அமித்ஷா வீட்டுக் கதவைத்தான் தட்டக்கூடாது!

மக்களுக்கு சேவை செய்ய வீடு வீடாகக் கதவைத் தட்டுவதில் தவறில்லை!

கவிஞர் காசி முத்து மாணிக்கம் பேச்சு!

சென்னை, ஜூலை 18-

மக்களுக்கு சேவை செய்ய வீடு வீடாகக் கதவைத் தட்டுவதில் தவறில்லை. எடப்பாடி போல அமித்ஷாவின் வீட்டுக்கதவைத் தான் தட்டக் கூடாது' என்று வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் கலைஞர் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

சென்னை கலைஞர் நகரில் தி.மு.க. செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன் தலைமையில், மூன்றாயிரம் நபர்களுக்கு தையல் மிஷின், பால்குக்குர், மிஷி, கிரைண்டர், புடவைகளை தி.மு.க.கழக வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் வழங்கினார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர்ராஜா, பகுதி செயலாளர்கள் கே.கண்ணன், ராஜா முன்னிலை வகித்தனர்.

விழாவில் கவிஞர் காசி முத்துமாணிக்கம் பேசியதாவது:

காவி கூட்டம் தமிழ்நாட்டில் மட்டும் அதிகமாக படித்து அதிகமாக கேள்வி கேட்கிறான். அவர்களை மட்டம் தட்டவேண்டும் என்று பல வகையில் முயற்சி செய்தது.

ஆரம்பத்தில் 1965 களில் இந்தியை திணித்து கல்வியில் தமிழர்களின் கனவை சிதறிடிக்க பார்த்தது. பின் நீட்டினை புகுத்தி ஓரளவு நம்மை பலவீனமாக்கியது.

அதன்பின் விஸ்வகர்மா திட்டம் திணித்தது. இந்தி படிக்காவிடில் ஆண்டுக்கு 9,000 கோடி இல்லை என்றது. பணம் போனாலும் பரவாயில்லை. என் மண், மானம் வீழ விடமாட்டேன் என தளபதி அந்த 9,000 கோடியை தமிழக அரசு தரும் என்றும் சொன்னார். அதிலும் அவர்களின் கனவு தோல்வி அடைந்தது.

இப்போது ஆலயங்களின் மூலம் படிக்கும் மாணவர்களின் கல்வியை தடுக்க பார்க்கிறது. "கோவில் பணம் கோவிலுக்கே" என்றால், "கோசாலா, மடப்பள்ளி, விவசாய நிலம்" எதற்கு என கேட்கமாட்டார்களா? போக்குவரத்து கழகத்தின் சார்பில் கல்லூரி எதற்கு? என கேட்கமாட்டார்களா?

ஆந்திரா திருப்பதி தேவஸ்தானத்தில் 4 பள்ளிகள், 7 கல்லூரிகள் உள்ளனவே, கேரளாவில் குருவாயூரப்பன் சன்னிதானம் சார்பில் பள்ளி, கல்லூரிகள் உள்ளன. பழனியில் உள்ளது. ஏன் நமது மேல் மருவத்தூர், குன்றக்குடி சன்னிதானங்கள் கல்லூரி, பள்ளிகள் அனைத்து மடங்களிலும் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன.

நடத்தவில்லையா? அனைத்து மடங்களிலும் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன.

1961-லேயே அன்றைய முதல்வர் பக்தவச்சலம், பழனி முருகன் சன்னிதான நிதியில் பள்ளிகள், கல்லூரிகள் கட்டவில்லையா?

மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா ஆகியோர் கோவில் நிதியில் கல்லூரி கட்டவே இல்லையா?

கோவிலால் கல்லூரிகள் உங்கள் காலத்தில் குறைவு. எங்கள் காலத்தில் நிறைவு. அதற்கு காரணம் நிர்வாக சிறப்பு.

அபகரிக்கப்பட்ட கோவிலின் 7,800 கோடி நிலங்களை உங்களை போன்ற ஆன்மீக வாதிகள் கைப்பற்றியதை மீட்டோம். பழைய நகைகளை உருக்கி வங்கியில் டெபாசிட் செய்து, அதன் வட்டியில் கோவில் அர்ச்சகர்களின் குழந்தைகளின் கல்வி உதவியாக ஆளுக்கு ரூ. 10,000/-வீதம் வழங்கும் திட்டம் இப்போது நடைபெற்று வருகிறது.

அதுமட்டுமல்ல, ஒரு வேளை பூஜைகூட இல்லாத கோவில்கள் கண்டறியப்பட்டு 2,500 கோவிலுக்கும் ஆண்டிற்கு 2 லட்சம் வீதம் 50 கோடி வழங்கப்படுகிறது. 3200 கோவில்களுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

4 புதிய தெப்பம், 126 தெப்பக்குளம் பழுது பார்த்தல், 26 கல்யாண மண்டபங்கள் என தொடர்கிறது. கோவில் சார்பில் 25 பள்ளிகள், 9 கலைக்கல்லூரி, 1 பாலிடெக்னிக் கட்டப்பட்டு அறிவு தீபம் வளர்க்கப்படுகிறது.

சிலநாள் முன்பு சன் டி.வி.யில் தனது வருமானத்தில் ஒரு பகுதியை தலித் மாணவர்கள் படிக்கும் 44 பள்ளிகளை தேர்வு செய்து, 3.5 கோடி வழங்கியுள்ளது. இந்த 4 ஆண்டில் தலித் குழந்தைகளுக்கு 13.5 கோடி வழங்கி உள்ளது. சன் டி.வி. வருமானம், சன் டி.வி. கட்டிடத்திற்கும், ஊழியர்களுக்கும்தான் என கூற முடியமா?

இந்த ஆண்டு மட்டும் கொடுத்துள்ளனர் சன்.டி.வி.யினர். குழந்தைகள் படிப்புக்கு 10 கோடி திருச்செந்தூர் ஒரு கோவிலுக்கு 200 கோடி வசூல், அரசு நிதி 200 கோடி என 400 கோடி செலவு செய்யப்பட்டது.

மேலும் எடப்பாடி கூறுகிறார், தி.மு.க.வினர் தேர்தல் வந்த உடன் வீடு வீடாக கதவு தட்டுகின்றனர் என்கிறார். ஆம் தி.மு.க.வினர்தான் கதவு தட்டியவர்கள், கதவை தட்ட வைத்தவர்கள், கொரனா காலத்தில் தொலைபேசி எண்ணை கொடுத்து, தொடர்பு கொண்டவர்களின் வீட்டின் கதவை தட்டி, நிவாரண பொருட்களை சில மாதங்களுக்கு தேவையான மளிகை பொருட்களை கொடுத்த கதவை தட்டிய இயக்கம் தி.மு.க.தான்.

ஆன்மீகவாதி சாய்பா பாவே, வாழும் இராஜ இராஜசோழனை பார்க்கவேண்டும் என கோபாலபுரத்து கதவுகளை தட்டவைத்த இயக்கம்தான் தி.மு.க. எமர்ஜென்சி காலத்தில் அன்றைய எதிர்கட்சியான உங்கள் கூட்டத்தில் ஜார்ஜ் பெர்ணான்டஸ் உள்ளிட்ட தலைவர்களை பாதுகாப்பு கேட்டு, தி.மு.க. தலைவரின் கோபாலபுர வீட்டின் கதவை தட்ட வைத்த இயக்கம் தி.மு.க.

வீடு தேடி மருத்துவ திட்டத்தில் மாடு கூட ஏறமுடியாத மலைகளில் ஏறி, கதவு தட்டி மருந்து கொடுக்கும் இயக்கம் தி.மு.க. தட்டத்தானே செய்யும். இல்லம் தேடி கல்வி, கல்வி தருவதற்கு ஒவ்வொரு வீடாக சென்று கதவு தட்டிய இயக்கம் தி.மு.க. கதவு தட்டுவதில் எங்களுக்கு ஒன்றும் கௌரவ குறைச்சல் இல்லை.

பழனிச்சாமியைப் போல் சம்பாதித்ததையும், சம்பந்தியையும் காத்திட கார் மாறி மாறி போய் அமித்ஷா வீட்டின் கதவைத் தட்டத்தான் கூடாது. அவர் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று சொல்லும்போது கை கட்டத்தான் கூடாது.

மேலும் பழனிச்சாமி தனது சுற்றுப்பயணத்தில், "தளபதி கடன்வாங்கி, கடன் வாங்கி உங்களை ஏமாற்றுகிறார்" என்கிறார் பழனிச்சாமி.

1947 முதல் 2011 வரை தமிழகத்தின் கடன் ஒரு லட்சம் கோடி. ஆல் எடப்பாடி, ஜெயலலிதா ஆண்ட பத்தாண்டுகளில் 5,50,000 கோடிக்கு வட்டி என்ன ஆனது என்று தெரியாதது போல் பேசாதே. இன்று அது 7,50,000 கோடி ஆகி உள்ளது. நீ வாங்கிய கடனுக்கும் நாங்கள் கட்டிய வட்டிதான் ஏறி இருக்கிறது. தனிக்கடன் அல்ல.

ஒன்றிய அரசின் சிஏஜி "தமிழகத்தின் கடன் விதிக்கப்பட்ட எல்லைக்குள் கட்டுக்குள்தான் இருக்கிறது" என்று சொல்லியுள்ளது. நீ வாங்கிய 5,50,000 கோடிக்கு வட்டி என்ன ஆனது என்று தெரியாதது மாதிரி பேசாதே.

எல்லாம் புலியைப் பார்த்து பூனை சூடு போட்ட கதையாய், தளபதியை பார்த்து இவர் ரோடு ஷோ போகிறாராம். நடைபயணம் போகிறேன் எனக்கூறி புறப்பட்டு இப்போது பேருந்து ஷோவுக்கு மாறிவிட்டார்.

காலையில் அரசு நிகழ்ச்சிகள், மதியம் உணவு இடைவேளை, அதிகாரிகளுடன் மாலை சந்திப்பு, பின் பொதுக்கூட்டம் எனச் செல்லும் தளபதி, விடியற்காலை 8 கிலோமீட்டர் முதல் 10 கிலோ மீட்டர் ரோடு ஷோ போவார். கர்ணனுக்கு கவச குண்டலம் போல் நடந்து செல்வது அவர் உடன் பிறந்த சக்தி. எதிர்கட்சியாக இருக்கும்போதே நமக்கு நாமே என சுற்றுப்பயணம் போனவர்.

இவ்வாறு தி.மு.க. வர்த்தகர் அணிச்செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம் பேசினார்.

விழாவில், மாவட்ட துணைச்செயலாளர் பா. வாசுகிபாண்டியன், ஏ.கே. கல்வி அறக்கட்டளைநிர்வாக துணை இயக்குநரும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளருமான கனிமொழி தனசேகரன், பகுதி நிர்வாகி தியாகு, வட்ட செயலாளர்கள் கே. சதீஷ்கண்ணன், சோ. செந்தில்குமார், ஜம்பு முருகன், எஸ். மைக்கேல், வீ.ஏ. இராஜா, எஸ். பாஸ்கரன், ஆர். பாபு, மாவட்ட பிரிதிநிதிகள் பா. தினேஷ்குமார், டி.எஸ்.பி. தென்னரசு, த. மாரியப்பன், சோழா எஸ். ரவி, எஸ். சண்முகம், வட்ட துணை செயலாளர்கள் அ. அசோக்குமார், மாணவர் அணி ஆர். சுதாகரன் மற்றும் நிர்வாகிகள், மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மற்றும்

மாவட்ட அணிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் ஜூலை 18;-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று 18.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமை வகிக்கிறார்

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன்.எம்.எல்.ஏ இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் செல்வராஜ் அழகிரி சதாசிவம், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ். ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.

வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு.ஜெகதீசன், மு.முரளிதரன், ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஜி.ரவிக்குமார், இரா,அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள்:- ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை" மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது என மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கையின் வாயிலாக தெரிவித்து கொண்டார்.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 5,வது மண்டலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது . இம் முகாமை தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார் உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் மாமன்ற உறுப்பினர் பி.ஜோதிகுமார். ரமணிஆதிமூலம். சி.சுரேஷ்.பகுதி கழக துணை செயலாளர் கி.வேலுமணி. கோமதி லோகநாதன். ஆரோக்கியசாமி முன்னாள் நகர மன்ற உறுப்பினர். கலைச்செல்வி ஜோதிகுமார், திவாகர். மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.